தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 ஏப்ரல் 6, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை."

தன் கைப்பொருளைக்கொண்டு ஒரு தொழில் செய்வது என்பது, யானைகள் ஒன்றோடொன்று போரிடும்போது இடையில் சிக்கிக் கொள்ளாமல், அந்தப் போரை, ஒரு குன்றின்மீது நின்று காண்பதைப் போன்று, இலகுவானது.

1. இரங்கல் தீர்மானம்

செங்கல்பட்டு மாவட்டம், மூவரசம்பட்டு கிராமம், தர்மலிங்கேஸ்வரர் கோயில் தீர்த்தவாரி குளத்தில் மூழ்கி ஐந்து பேர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செங்கல்பட்டு மாவட்டம், மூவரசம்பட்டு கிராமத்தில் உள்ள தர்மலிங்கேஸ்வரர் கோயில் தெப்பக்குளத்தில் 5–4–2023 அன்று தீர்த்தவாரி நிகழ்வின்போது 5 பேர் உயிரிழந்தது குறித்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இத்துயர சம்பவத்தில், தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள்

அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

வாய்க்காலைத் தூர் வாருதல்

***1408—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், பாக்கம்பாடி அணைக்கட்டிலிருந்து செல்லும் வரத்து வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், பெரியேரி கிராமத்தின் அருகே வசிஷ்டா நதியின் குறுக்கே அமைந்துள்ள பாக்கம்பாடி அணைக்கட்டிலிருந்து செல்லும் வாய்க்கால்கள், பாக்கம்பாடி ஏரி வரை செல்கின்றன. அனைத்து கிராம ஏரி வாய்க்கால்களையும் முன்னுரிமை அடிப்படையில், ஆண்டுப் பராமரிப்பு பணிகள்மூலம் மதிப்பீடு தயார் செய்து, தூர் வாரி பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*